## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நாகர்கோவில் – சங்கரன்கோவிலில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை நேற்று (ஏப்ரல் 3ஆம் தேதி ) திருநெல்வேலியில் தொடங்கினார்.**

**இன்றுகாலைநாகர்கோவிலிலும், மாலையில் சங்கரன் கோவிலிலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | நாகர்கோவில் (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | சங்கரன்கோயில் (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## வேலூர் மாவட்டம் - காட்பாடியில் மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்- அமைச்சர் துரைமுருகன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்!



வேலூர், ஏப்.4-

வேலூர் மாவட்டம் காட்பாடியில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் கழக பொதுச் செயலாளர், அமைச்சர் காட்பாடி தொகுதி தி.மு.க. வேட்பாளர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து கொண்டனர்.

தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் காட்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகிறார் .அதைத் தொடர்ந்து அமைச்சர் துரைமுருகன் காட்பாடி தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் பகுதிகளுக்குச் சென்று முக்கிய பிரமுகர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்.

மேலும் பொதுமக்களையும் சந்தித்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

இந்த நிலையில் காட்பாடி சட்டமன்றத் தொகுதி விருதம்பட்டு வட்ட கழகத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. கட்சியைச்சேர்ந்த மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் மைதிலி கண்ணன் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் கட்சியிலிருந்து விலகி, தி.மு.க. பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் பகுதிச் செயலாளர் என்.பரமசிவம், வட்டச் செயலாளர் சி.அரி கிருஷ்ணன் மாநகர துணைச் செயலாளர் ஓய். தேவநேசன், மாவட்டப் பிரதிநிதி பன்னீர்செல்வம்,பகுதி இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.சுந்தர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற தொகுதி பார்வையாளர். திருமதி. ராணி ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், பி.சேகர், க.குமணன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி, வள்ளல் என்.பாண்டியன், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.